(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 463.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2015 யூன் 23, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4788/ '14

1.

கௌரவ அசோக் அபேசிங்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஆண்டொன்றில் சிறு போகம், பெரும் போகம் ஆகிய இரு போகங்களிலும் பயிரிடுவதற்கு தேவைப்படும் விதை நெல்லின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) தற்சமயம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் விதை நெல்லின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) தேவைப்படும் விதை நெல்லை உற்பத்தி செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) விதை உற்பத்தியை பெருக்குவதற்கு விதைக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்துவாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5575/ '14

2.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தற்போது அமுலிலுள்ள ஆயுர்வேத சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி சட்டம் திருத்தப்பட்டுள்ள தவணைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இது இறுதியாக திருத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iv) இற்றைவரை இச்சட்டம் திருத்தப்படவில்லையெனில், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆயுர்வேத மருத்துவ பட்டதாரிகள், மருத்துவ உத்தியோகத்தர் என்ற பெயரிலா இன்றேல் மருத்துவ நிபுணர்கள் என்ற பெயரிலா அழைக்கப்படுகின்றார்கள் என்பதையும்;

(ii) இவர்களை இப்பெயரில் அழைப்பதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5708/ '14

3.

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2011 தயட்ட கிருள நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக 2011 ஜன செவன பத்து இலட்சம் வீடுகள் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு நடவடிக்கையின் கீழ் மொனறாகலை மாவட்டத்தினுள் வீடமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இனங்காணப்பட்ட மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் வீடமைப்பு வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி திட்டத்திற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) குறிப்பிட்ட பணத்தொகை பெறப்பட்ட முறையியல் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 ஜன செவன பத்து இலட்சம் வீடுகள் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு நடவடிக்கையின் கீழ் வீடமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு இனங்காணப்பட்ட குடும்பங்களுக்கு எழுத்துமூல வாக்குறுதியொன்று வழங்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) குறிப்பிட்ட வாக்குறுதியின்படி இற்றைவரை வீடுகள் கிடைக்காதுள்ள குடும்பங்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) இதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5759/ ' 14

4.

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும், கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்பிரகமுவ மாகாணத்தில் குரகல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனிதத் தலத்தில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளல் நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குரகல புனிதத் தலத்திற்கு சொந்தமான காணியின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிலப்பரப்பின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அகழ்வுகளின் மூலம் கிடைத்த தொல்பொருட்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) குரகல புனிதத் தலத்தின் பௌத்த உரிமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி அகழ்வுகளை இடையறாமல் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5931/ '15

5.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுனாமி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்த மாத்தறை மாவட்ட மக்களுக்கு வழங்கிய வீடுகளுக்கு தற்போது உறுதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அத்தகைய உறுதிகள் வழங்கப்படவில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவில் கந்தகொடல்ல (H.H.O. வீடுகள்), அபிமன்புர மற்றும் திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், மெதவத்த (லுனுகளப்புவ) முதியன்சேவத்த மற்றும் மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில் கால்லகே வத்த, துடாவ, கொடிகார கட்டிடம் மற்றும் லொரண்ட் சிட்டி ஆகிய இடங்களில் வழங்கப்பட்டுள்ள வீடுகளுக்கு சுயாதீனமான ஆதனங்களாக அல்லது தனி வீடுகளாக உறுதிகளை வழங்க முடியுமென தேசிய வீடமைப்பு அதிகாரசபை சிபாரிசு செய்துள்ளதா என்பதையும்;

(iv) அந்த வீடுகளுக்கு உறுதிகளை வழங்கும் கடமையை கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபைக்கு வழங்குவதற்காக அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) கூட்டாட்சி ஆதனங்கள் என்ற அடிப்படையில் அல்லது தனி வீட்டுரிமை என்ற அடிப்படையில் மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட வீடுகளைப் பெற்றவர்களுக்கு உறுதிகள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5939/ '15

6.

கௌரவ வாசுதேவ நாணயக்கார,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கௌரவ உயர் நீதிமன்ற நீதிபதி ஷிராணி திலகவர்தன அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்ட ஆயுத கடத்தல் பற்றி விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவினால் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இவ்வறிக்கை வெளியிடப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனின், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6026/ '15

7.

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய சனாதிபதி மற்றும் முன்னாள் சனாதிபதிகளில் எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தின் செயற்பாடுகள் காரணமாக உள்நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் ஆகக்கூடிய உயிர் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளவர்கள் யாவர் என்பதை புலனாய்வுப் பிரிவுகள் உட்பட வேறு தகவல்கள் மூலமாக இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர்கள் யாவரென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) முன்னாள் சனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் ஓய்வுபெறும் போது வழங்கப்பட்டிருந்த பாதுகாவலர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போது இவரது பாதுகாப்புப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாவலர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) முன்னாள் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பதவியிலிருந்து நீங்கிச் செல்லும் போது வழங்கப்பட்டிருந்த பாதுகாவலர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள பாதுகாவலர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) முன்னாள் சனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பினை குறைத்தல்/ அதிகரித்தல் சம்பந்தமாக பயன்படுத்தப்படும் அளவுகோள் யாதென்பதையும்;

(iv) அது சம்பந்தமான முடிவுகளை மேற்கொள்பவர்கள் மற்றும் அதற்கு பொறுப்பானவர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6034/ '15

8.

கௌரவ விஜித ஹேரத்,—சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) ஹோமியோபதி சட்டத்தின் பிரகாரம் 2006-2011 வரையான காலப் பகுதிக்காக நியமிக்கப்பட்டிருந்த ஹோமியோபதி மருத்துவப் பேரவையானது அரசியலமைப்பின் 12 மற்றும் 14 ஆம் உறுப்புரைகளுக்கு முரணாக 2009.10.29. ஆம் திகதி கலைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அதன் காரணமாக 2006 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட குறிப்பிட்ட மருத்துவப் பேரவை அங்கத்தவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளனவென்பதையும்;

(iii) கலைக்கப்பட்ட மருத்துவப் பேரவைக்குப் பதிலாக அப்போதைய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் சட்டபூர்வமற்ற இடைக்கால குழுவொன்று நியமிக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நியமனத்தை அங்கீகரிக்கின்றாரா;

(ii) மேற்படி இடைக்கால குழுவினால் மேற்கொள்ளப்பட்ட இலக்கம் 184 தொடக்கம் 275 வரையான மருத்துவர்கள் பதிவு செய்யப்பட்டதன் ஊடாக ஹோமியோபதி சட்டம் மீறப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், மேற்படி நியமனங்களை இரத்துச் செய்வாரா;

(iv) இரத்துச் செய்யும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஹோமியோபதி சட்டத்தின் 20 வது பிரிவின் கீழ் பதிவாளரொருவரை நியமிக்க மருத்துவப் பேரவையொன்றுக்கு மாத்திரம் உரித்தான தத்துவத்தை மீறி அப்போது நிலவிய சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளரால் திரு. எம். ஏ. பெரேரா பதிவாளராக நியமிக்கப்பட்டமை சட்டபூர்வமானதா;

(ii) இன்றேல், மேற்படி நியமனத்தை சரிசெய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6076/ '15

9\.

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகிந்த சிந்தனையின் கீழ் அரச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்காக அறவிடப்பட்ட ரூ. 50,000/- தொகையை திருப்பிச் செலுத்துவதென 100 நாள் வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த வாக்குறுதியின்படி தற்போது அப்பணத்தொகையை திருப்பிச் செலுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், தற்போது அப் பணத்தொகை திருப்பிச் செலுத்தப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

5760/ ' 14

10\.

கௌரவ புத்திக பதிரண,— உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பணத்தொகையின் பெறுமதி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பணத்தொகை செலவிடப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக நாட்டிற்கு கிடைத்த நன்மைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) புத்தாக்குநர்களை ஊக்குவிப்பதற்காக அப்போதிருந்த தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு மேற்கொண்ட பணிகள் யாவையென்பதையும்;

(ii) 2014 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட புத்தாக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி புத்தாக்கங்களை சமர்ப்பித்தவர்கள் யாவரென்பதையும்;

(iv) இவர்களுக்கு வழங்கப்பட்ட அனுசரணைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒதுக்கப்படும் பணத்தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதிகரிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படும் பணத்தொகை யாதென்பதையும்;

(iii) அப்பணத்தொகையை செலவிடுவதற்காகவுள்ள திட்டம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6027/ '15

11\.
கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு சொந்தமான 228 பீ தம்பலகாமம் கிராம சேவையாளர் பிரிவின் முள்ளிப்பொத்தான, பெரக்கும் ப்ளேஸ், 05 ஆம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஈ.கே.ஜீ. ஜயதிலக்க குடும்பத்திற்கு ரூபா 2000/- சமுர்த்தி கொடுப்பனவும், அதே பிரிவில் மொல்லிபொத்தான, பெரகும் ப்ளேஸ், 131 ஆம் இலக்கத்தில் வசிக்கும் நான்கு பேரைக் கொண்ட யூ.ஜீ. அனுலாவதி குடும்பத்திற்கு ரூபா 3000/- சமுர்த்தி கொடுப்பனவும் கிடைக்க வேண்டும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொடுப்பனவுகள் கிடைக்க வேண்டுமெனினும் தற்போது ஈ.கே.ஜீ. ஜயதிலக்க குடும்பத்திற்கு ரூபா 1000/- கொடுப்பனவும் யூ.ஜீ. அனுலாவதி குடும்பத்திற்கு ரூபா 2000/- கொடுப்பனவும் வழங்கப்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) கட்டாய சேமிப்புப் பணத்தொகைக்கு புறம்பாக இந்த இரண்டு குடும்பத்திற்கும் உண்மையிலேயே கிடைக்கவேண்டிய சமுர்த்தி கொடுப்பனவை இவர்களுக்கு வழங்குவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கொடுப்பனவு எத்தேதியில் ஆரம்பிக்கப்படுமென்பதையும்;

(iv) மேற்படி கொடுப்பனவிற்கு நிலுவைப் பணத்தொகையும் சேர்க்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

6077/ '15

12\.
கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இடைக்கால வரவுசெலவு திட்டத்தின் மூலம் 200% ஆல் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவு நன்மைகள் பொது மக்களுக்கு வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி நன்மைகளை வழங்குகையில் சமுர்த்தி பயனாளிகளின் பெயர் பட்டியல்கள் திருத்தப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி திருத்தங்கள் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) மேற்படி கொடுப்பனவுப் பத்திரப் பெறுமதிகளுக்கான பயனாளிகளை தெரிவு செய்யும் முறையியல்கள்/ பிரமாணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5761/ '14

13\.
கௌரவ புத்திக பதிரண,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் வெளிநாடுகளில் சிறைபிடிக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ள நாடுகள் மற்றும் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள மீனவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சிறைபிடிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மீனவரினதும் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் சிறையிலுள்ள காலப்பகுதி யாதென்பதை வெவ்வேறாக அவர் சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) (i) சிறைபிடிக்கப்படுகின்ற மீனவர்களை துரிதமாக மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதது ஏனென்பதையும்;

(ii) மீனவர்கள் கடல் எல்லைகளை மீறுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்கள் விடுதலை பெற்ற பின்னர் அவர்களது தொழிலை மீள ஆரம்பிப்பதற்கு உதவி வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6082/ '15

14.

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் கால வரையறை யாது என்பதையும்;

(ii) யாப்பகுவ மற்றும் கல்கமுவை தேர்தல் தொகுதிகளுக்கு மகாவலி நீரை வழங்கும் திட்டத்துக்கமைய ஹக்வட்டுனாவ மற்றும் பீல்ல அணை வீதிகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iii) இதற்காக நிதி ஒதுக்குவாரா என்பதையும்;

(iv) பொல்பித்திகமையில் ஆரம்பிக்கப்பட்ட நீர்ப்பாசன அலுவலகத்தின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், 2015 யூன் மாதம் 24ஆம் திகதி புதன்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை இருக்குமாக. மு.ப. 10.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 3),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2015 யூன் மாதம் 24 ஆம் திகதி, புதன்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

4.

கௌரவ அஜித் குமார,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து 2015.01.29 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தில் தெரிவித்த கூற்றில் உள்ளடங்கியுள்ள தனியார்துறையின் சம்பளம் மற்றும் படிகளின் பொருட்டு ஊழியர் ஒருவரின் மாதச் சம்பளத்தை ரூபா 2500 ஆல் அதிகரிக்கும் படியான முன்மொழிவை நடைமுறைப்படுத்தும் பொருட்டும் ஒரு சில வகையினதான ஊழியர்களுக்கு தொழிலதிபர்கள் வரவு செலவுத் திட்ட நிவாரணக் கொடுப்பனவொன்றை செலுத்தும் பொருட்டும் அதற்கு இடைநேர்விளைவான கருமங்களின் பொருட்டும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்"

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஆட்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குவிப்புப் பதார்த்தப் பயன்பாடிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குவிப்புப் பதார்த்தப் பயன்பாடிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 34 ஆம் பிரிவின் கீழ் சுற்றுலா மற்றும் விளையாட்டுக்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 மே மாதம் 05 ஆம் திகதிய 1913/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.06.09ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்,— கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014 ஓகத்து மாதம் 28 ஆம் திகதிய 1877/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.06.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

தொழில் அமைச்சர்,— சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தொழில் அமைச்சரினால் (136 ஆம் அத்தியாயமான) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் 2015.06.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

நிதிச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 12.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2013ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.32 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.32

2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "புகையிரத பண்டகசாலை முற்பணம் - இலங்கை புகையிரத திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 1,700,000,000 இலிருந்து ரூபா. 2,200,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா. 6,102,000,000 இலிருந்து ரூபா. 6,602,000,000 வரை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா. 850,000,000 இலிருந்து ரூபா. 1,000,000,000 வரை

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.04.10 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2013ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.33 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.33

2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 24702 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் "பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான செலவினங்கள் முற்பணக் கணக்கு - இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு" அளிக்கப்பட்டுள்ள விடயத்துக்காக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா. 20,000,000 இலிருந்து ரூபா. 25,000,000 வரை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.04.10 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.3),— 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல. 34 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.34

2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனைக்கான (வெளியீட்டு உரிமையை பகிரங்கப்படுத்தல், மொழிபெயர்ப்பு உரிமையைக் கொள்வனவு செய்தல், மொழிபெயர்ப்புக் கட்டணம் மற்றும் பணியாளர்களின் சம்பளக் கொடுப்பனவு உட்பட) முற்பணக் கணக்கு — கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — ரூபா. 2,900,000,000 இலிருந்து ரூபா. 2,500,000,000 வரை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா. 1,500,000,000 இலிருந்து ரூபா. 2,250,000,000 வரை

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.04.10 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.4),— 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.35 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.35

2013ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பண்டகசாலை முற்பணக் கணக்கு - அரசாங்க தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 170,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.04.10 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.5),— 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.36 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.36

2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், இக் கட்டளை மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "முடிக்கப்பட்ட வேலை முற்பணக் கணக்கு - அரச தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 260,000,000 இலிருந்து ரூபா. 450,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.04.10 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.6),— 2013ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட இச்சட்டத்தின் உப பிரிவில் உரிய முறையில் குறித்துரைக்கப்பட்ட நியமங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

## அட்டவணை

### 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை

நிதி ஆண்டு 2014 தொடர்பில், 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

**குழுத்தொடர் இலக்கம். 01**

2013 அம் ஆண்டின் இலக்கம் 36 ஐக் கொண்ட 8 வது பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, ரவி கருணாநாயக்க ஆகிய நான் நிதி அமைச்சர் என்ற வகையில் அரச அங்கீகாரத்தின் கீழ் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரச ஊழியர்களுக்கான முற்பணக் கணக்குகளில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடய இலக்கங்களுக்கு அமைவான சட்டத்தின் மூன்றாம் உப பிரிவின் நிரல் இலக்கம் II மற்றும் IV இல் குறிப்பிடப்பட்டுள்ள உச்ச ஒதுக்கீட்டெல்லைகளையும் இலக்கம் III இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைகளையும் மாற்றியமைக்கின்றேன். 14001, 18201, 10501, 22801, 20801, 27701, 30301, 26901, 27001, 27201, 24201, 28601, 10201, 25601, 25801, 28201, 28501, 11601, 28801, 30601, 27901, 27801, 27401, 27501, 21901, 17801, 12601, 11101, 18801, 21101, மற்றும் 19001.

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் | | III அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லைகள் | | IV அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பற்று மீதிகளின் உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சு | 14001 | 7,000,000 | 10,000,000 | 3,700,000 | 4,000,000 | - | - | 1 |
| 2. | வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சு | 18201 | 5,000,000 | 8,000,000 | 1,100,000 | 4,100,000 | - | - | 2 |
| 3. | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 10501 | 140,000,000 | 170,000,000 | 60,000,000 | 90,000,000 | - | - | 3 |
| 4. | நீதி மன்றங்களின் நிர்வாகம் | 22801 | 260,420,000 | 290,420,000 | 170,000,000 | 175,000,000 | 850,000,000 | 1,100,000,000 | 4 |
| 5. | தேசிய நூதனசாலைகள் திணைக்களம் | 20801 | 9,000,000 | 12,000,000 | - | - | - | - | 5 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6. | மாவட்டச் செயலகம், மொனராகலை | 27701 | - | - | 25,000,000 | 24,000,000 | - | - | 6 |
| 7. | புடவைக் கைத்தொழில் திணைக்களம் | 30301 | - | - | 3,000,000 | 2,900,000 | - | - | 7 |
| 8. | மாவட்டச் செயலகம்/ கச்சேரி, மட்டக்களப்பு | 26901 | - | - | 23,000,000 | 18,000,000 | 90,000,000 | 100,000,000 | 8 |
| 9. | மாவட்டச் செயலகம்/ கச்சேரி, அம்பாறை | 27001 | - | - | 35,000,000 | 30,000,000 | - | - | 9 |
| 10. | மாவட்டச் செயலகம், குருணாகல் | 27201 | - | - | 75,000,000 | 65,000,000 | - | - | 10 |
| 11. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 24201 | - | - | 2,000,000 | 1,700,000 | - | - | 11 |
| 12. | காணி ஆணையாளர் நாயகம் | 28601 | - | - | 12,000,000 | 11,500,000 | - | - | 12 |
| 13. | நிதி, திட்டமிடல் அமைச்சு | 10201 | 15,000,000 | 12,000,000 | 9,500,000 | 8,500,000 | - | - | 13 |
| 14. | மாவட்டச் செயலகம், கம்பஹா | 25601 | - | - | 56,000,000 | 53,000,000 | - | - | 14 |
| 15. | மாவட்டச் செயலகம், கண்டி | 25801 | - | - | 51,000,000 | 46,000,000 | - | - | 15 |
| 16. | நீர்ப்பாசனத் திணைக்களம் | 28201 | - | - | 100,000,000 | 97,000,000 | - | - | 16 |
| 17. | கமத்தொழில் திணைக்களம் | 28501 | - | - | 150,000,000 | 120,000,000 | - | - | 17 |
| 18. | கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு | 11601 | 6,000,000 | 7,500,000 | - | - | - | - | 18 |
| 19. | நில அளவையாளர் திணைக்களம் | 28801 | - | - | 100,000,000 | 86,000,000 | - | - | 19 |
| 20. | இலங்கை புகையிரதத் திணைக்களம் | 30601 | - | - | 385,000,000 | 290,000,000 | - | - | 20 |
| 21. | மாவட்டச் செயலகம், கேகாலை | 27901 | - | - | 30,000,000 | 26,000,000 | - | - | 21 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22. | மாவட்டச் செயலகம், இரத்தினபுரி | 27801 | - | - | 38,000,000 | 32,000,000 | - | - | 22 |
| 23. | மாவட்டச் செயலகம், அநுராதபுரம் | 27401 | - | - | 40,000,000 | 35,000,000 | - | - | 23 |
| 24. | மாவட்டச் செயலகம், பொலன்னறுவை | 27501 | - | - | 18,000,000 | 15,000,000 | - | - | 24 |
| 25. | விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் | 21901 | 8,000,000 | 8,011,000 | - | - | - | - | 25 |
| 26. | தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு | 17801 | 4,000,000 | 5,000,000 | - | - | - | - | 26 |
| 27. | கல்வி அமைச்சு | 12601 | - | - | 680,000,000 | 675,000,000 | - | - | 27 |
| 28. | சுகாதார அமைச்சு | 11101 | - | - | 710,000,000 | 653,000,000 | - | - | 28 |
| 29. | தாவரவியல் பூங்கா மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு | 18801 | 2,000,000 | 2,060,110 | - | - | - | - | 29 |
| 30. | அரசாங்க அச்சாளர் திணைக்கம் | 21101 | - | - | 45,000,000 | 44,000,000 | - | - | 30 |
| 31. | சட்டமும் ஒழுங்கும் அமைச்சு | 19001 | - | - | 83,000,000 | 60,000,000 | - | - | 31 |
| | மொத்தம் | | 456,420,000 | 524,991,110 | 2,905,300,000 | 2,666,700,000 | 940,000,000 | 1,200,000,000 | |

2015 ஏப்பிரல் 10 ஆம் திகதி
கொழும்பு - 01.

ஒப்பம்: ரவி கருணாநாயக்க
நிதி அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.1),— 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2015 சனவரி 29 ஆந் திகதிய 1899/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.2),— 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2015 பெப்புருவரி 26ஆந் திகதிய 1903/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2014 திசெம்பர் 02 ஆந் திகதிய 1891/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 21.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2014 திசெம்பர் 12 ஆந் திகதிய 1892/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 22.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2014 திசெம்பர் 31 ஆந் திகதிய 1895/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 23.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 சனவரி 22 ஆந் திகதிய 1898/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 24.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 சனவரி 29 ஆந் திகதிய 1899/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 25.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 பெப்புருவரி 14 ஆந் திகதிய 1901/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 26.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.7),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 பெப்புருவரி 24 ஆந் திகதிய 1903/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 27.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.8),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 மாச்சு 17 ஆந் திகதிய 1906/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 28.

நிதி அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 29.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆந் திகதிய 1903/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 30.

நிதி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமாக, 2014 ஏப்பிறல் 03 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் சிங்கப்பூர் குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையே செய்துகொள்ளப்பட்டதும், 2015.04.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97(1)(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 31.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(இ) ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.05.19ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(974 ஆம் இலக்க மது அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 32.

சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2012,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் 2014.10.23 ஆம் திகதி சமர்ப்பிக் கப்பட்டதும் 2012.12.31ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.11.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 33.

சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2012,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2014.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2012.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.11.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 34.

வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர்,— இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை 2012,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2014.09.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2012.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிநுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.10.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 35.

உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை 2012,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40 (3) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு, 2014.09.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2012 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டதுமான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால்
2014.10.10 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 36.

உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்,— நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை 2011,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40 (3) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு, 2014.09.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டதுமான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால்
2014.10.10 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 37.

உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை 2012,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு, 2014.08.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2012 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டதுமான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால்
2014.10.10 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 38.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 39.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 40.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 41.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.12.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 42.

மின்வலு, எரிசக்தி அமைச்சர்.— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் மின்வலு, சக்தி அமைச்சரால் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் பேரில் மின்சார (அனுமதிப்பத்திரம் தொடர்பில் விண்ணப்பித்தலும் விலக்களிப்பும்) தொடர்பில் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 10 ஆம் திகதிய, 1883/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 43.

சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 44.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 45.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

47.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

48.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

49.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

50.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.